*கவனிக்க.-18.03.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1699 - 2011 මාර්තු මස 25 වැනි සිකුරාදා - 2011.03.25**

*1699 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 371 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, மாச்சு மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை வகுப்பு I இற்கு தரமுயர்த்தும் பரீட்சை – 2010

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்கான தகவுப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிள் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2011, யூலை மாதம் நடாத்தப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வருமாறு :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருணாகல் | 10 |
| அனுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

மேற்படி ஏதேனுமொரு நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் எண்ணிக்கை இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப் படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப் படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது அவர் அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்வதாக கருதப்படலாகாது.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டங்களை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படுகின்ற தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

4. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் பத்து (10) வருட முனைப்பான சேவைக்காலத்தையும், அத்திகதியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும் பூர்த்திசெய்துள்ள அலுவலர் ஒருவராதல்.

(ii) அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படுகின்ற வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.- இப்பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி, பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்தி ஒருவர் சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்காக தகைமையடைந்த திகதியாக கருதப்படும். மேற்படி தகைமைகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி அடைகின்ற அலுவலர்கள் வகுப்பு I இற்கு தரமுயர்வுபெறத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

5. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்திலான ஒரு தகவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் :-

| பாடம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|
| (1) தாபன நடைமுறைகள் | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 |
| (2) அரச நிதி முகாமை | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 |
| (3) விடய ஆய்வு | 1 மணித்தியாலம் | 100 |
| (4) பொது வினாத்தாள் | 1 மணித்தியாலம் | 100 |
| மொத்தம் | | 400 |

**தாபன நடைமுறைகள்**.- தாபன விதிக்கோவையின் I ஆம் II ஆம் தொகுதிகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் பிரயோக அறிவு எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 08 வினாக்கள் - (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் - (75 புள்ளிகள்)

**அரச நிதி முகாமை** :

(அ) நிதி ஒழுங்குவிதி பற்றிய பிரயோக அறிவு
(ஆ) கணக்காய்வு பற்றிய அடிப்படை அறிவு
(இ) அடிப்படை வங்கிகள் தொடர்பான அனுபவம்
(ஈ) களஞ்சியப்படுத்தல் பற்றிய அடிப்படை அறிவு ஆகியன தொடர்பாக பரீட்சித்தல் இவ்வினாத்தாளின் நோக்கமாவ துடன் இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டி ருக்கும்.

பகுதி I - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 08 வினாக்கள் (25 புள்ளிகள்).

பகுதி II - பகுதி கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் - (75 புள்ளிகள்).

**விடய ஆய்வு**.- அலுவலக நிர்வாகம் பற்றிய ஒரு பிரச்சினைக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை ஆராயுமுகமாக வடிவமைக்கப்பட்ட பல்விருப்பு சுருக்க விடைகள் மற்றும் பகுதிக் கட்டமைப்பு முறையிலான கட்டுரை வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். கற்கைக்காக விடயங்கள் வழங்கப்படுவதுடன் விடையளிக்க வேண்டிய வினாக்கள் பின்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

பகுதி I - பல்விருப்பு வினாக்கள் - 05 வினாக்கள் (05 புள்ளிகள்).
பகுதி II - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 05 வினாக்கள் (05 புள்ளிகள்).
பகுதி III - பகுதிக்கட்டமைப்பு முறையிலான - 05 வினாக்கள் (90 புள்ளிகள்).

**பொது வினாத்தாள்**.- உள்நாட்டு, வெளிநாட்டு நடப்பு விவகாரங்களில் விண்ணப்பகாரரது பொது அறிவைப் பரீட்சிப்பது இதன் நோக்கமாகும். இவ்வினாத்தாள் 3 பகுதிகளைக் கொண்டிருக்கும் :-

பகுதி I - பல்விருப்பு வினாக்கள் - 32 வினாக்கள் - (16 புள்ளிகள்).
பகுதி II - வழங்கப்படும் 04 தலைப்புக்களில் 02 இற்கு சிறுகுறிப்பு எழுதுதல் வேண்டும் - (36 புள்ளிகள்).
பகுதி III - வழங்கப்படும் கட்டுரை முறையிலான - 04 வினாக்களில் 02 இற்கு விடையளித்தல் வேண்டும் - (48 புள்ளிகள்).

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்திகள் சேவையில் சேர்ந்த மொழியிலே அல்லது வேறு அரச கரும மொழியொன்றில் இவ்வினாப்பத்திரங்களுக்கு பதில் எழுத வேண்டும்.

(ii) இப்பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் நூற்றுக்கு 40 வீத (40%) புள்ளிகளும் 160 அல்லது அதற்குக்கூடிய மொத்தப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. விண்ணப்பப்படிவங்கள் இவ்அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இம்மாதிரிப் படிவ உருவில் தமது விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2011, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக ''பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பும்போது திருப்திகரமான சேவை பற்றிய சான்றிதழ் ஒன்றையும் அதில் உள்ளடக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் எல்லா அம்சங்களிலும் சரியாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளது என்பதிலும் தன்னால் சேவைச்சான்றிதழில் கையொப்பம் இடப்பட்டுள்ளதென்பதிலும் திணைக்களத் தலைவர்கள் பொறுப்பாக இருக்கவேண்டும். பரீட்சை ஆணையாளரிடம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.– பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

9. **விண்ணப்பப்படிவங்கள்**.- இலக்கம் 1.1 இலிருந்து 1.9 வரையுள்ள தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவிலான ஒரு தாளில் விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம். எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்ய வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப் படிவங்களை அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக வுள்ளதா என்பதைப் பற்றி பரீட்சார்த்தியே பொறுப்புக் கூறுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கக்கூடியதாக இத்தீவிலுள்ள ஏதேனுமொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்பத்திரத்தின் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் படப்பிரதியொன்றை தங்கள்வசம் வைத்திருப்பது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

உரியவாறு விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து உரிய திகதிக்கு முன்னர் அவ்விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியுடன் அச்சிடப்பட்ட அனுமதி அட்டையையும் அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2, 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம், பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியுடன் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான பெக்ஸ்

இலக்கம் என்பவற்றை குறிப்பிட்ட கோரிக்கை கடிதம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப்பயனுள்ளதாகும்.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

11. அரச கரும மொழிக்கொள்கை நோக்கத்தின் பொருட்டு எல்லா விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவற்றை அம்மொழியிலேயே நிரப்ப வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2011, மாச்சு மாதம் 11 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[    ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு I இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2010**

Examination for Promotion of Officers in Class II of Public Management Assistants' Service to Class I – 2010

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 பிரகாரம் நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தையும், நகர இலக்கத்தையும் குறிப்பிடவும்.)

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர், (முதலெழுத்துக்கள் இறுதியில்) (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.
உதா.: SUNIL, A.B.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர், (முதலெழுத்துக்கள் இறுதியில்) (சிங்களத்தில்/தமிழில்) :----

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.5 நீங்கள் அரச சேவையில் சேர்ந்த பின் உங்களின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா ? ஆமெனில் முற்பட்ட பெயரைக் குறிப்பிடவும் :-----.

1.6 சேவை நிலையமும் முகவரியும் :-----.

1.6.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

1.6.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) : -----.

1.7 பால் :
பெண் - 1
ஆண் - 0
[ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1.8 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

1.9 தேசிய அடையாள அட்டை இல.:
[ | | | | | | | | | ]

2.0 தற்போது வகிக்கும் பதவி :-
2.1 பதவி :-----.
2.2 நியமனக் கடித இலக்கமும் திகதியும் :----.
2.3 குறித்த சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலராக நியமனம் பெற்ற திகதி :----.

வருடம் : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

2.4 நீங்கள் சேவைக்காலத்திற்குள்ளான எல்லா சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளீர்களா ? :----. இல்லாவிட்டால் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

2.5 நீங்கள் எத்தகையதுமான ஒரு தண்டனை/தண்டனைகளைப் பெற்றிருப்பின் அதுபற்றி சுருக்கமாகக் குறிப்பிடவும் :----.

2.6 நீங்கள் தற்போது ஒரு கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட சபையின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தால் அதுபற்றிய விபரங்கள் :----.

2.7 நீங்கள் வெளிநாட்டுத் தொழில் ஒன்றுக்காக அல்லது வேறு ஏதேனும் அலுவலுக்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்தால் அதுபற்றிய விபரங்கள் :----.

3.0

3.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர்களா? : ----.

3.2 பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணத்தின் பெறுமதி :----.

| |
|---|
| நீங்கள் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் 400 ரூபா பெறுமதியான பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். |

4.0 **விண்ணப்பதாரரின் கூற்று** :-

(i) மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் உண்மையானவை எனவும் ;

(ii) அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர் என்றும் ........... ஆந் திகதி நான் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இற்கு நியமனம் பெற்றேன் என்றும் ;

(iii) 2011, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் 10 வருடங்கள் முனைப்பான சேவைக்காலம் மற்றும் 5 வருட திருப்தி கரமான சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ளேன் என்றும் ;

(iv) நான் முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்று கின்றேன் என்றும்/பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும்

பயபக்தியுடன் உறுதிகூறுகிறேன்.

இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரியவருமாயின் எனக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அறிவேன். மேலும் பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(அடிக்குறிப்பை பார்க்கவும்)

திகதி :----.

**குறிப்பு**.- (1) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க் கப்படுவதற்கு முன்னர் வகித்த பொது எழுதுநர் சேவை அல்லது அதனோடிணைந்த சேவைகளின் வகுப்பு II/ II ''அ'' வின் சேவைக்காலத்தை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் சேவைக்காலத்தை கணிப்பீடு செய்யும்போது உரியதாகக் கொள்ள வேண்டும்.

(2) திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக கையொப்ப மிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலர் திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் .......... ஆந் திகதி என் முன்னிலையில் இதில் கையொப்பம் இட்டார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

-----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

(i) திரு./திருமதி/செல்வி ...................... என்பவர் 2011........... மாதம் ................ ஆந் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர் என்றும் ........................... ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை உடையவர் என்றும் ;

(ii) அவரது சுயவிபரக் கோவையின்படி வகுப்பு II இன் நியமனக் கடிதத்தின் இலக்கம் ........................................ (நியமனக் கடிதத்தின் இலக்கத்தை எழுதவும்) என்றும் ;

(iii) அவர் விண்ணப்பத்தின் 1.0 முதல் 4.0 வரையுள்ள பந்திகளில் தரப்பட்டுள்ள விபரங்கள் செவ்வை பார்க்கப் பட்டது என்றும் அவை சரியானவை என்றும் ;

(iv) அவர் முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகிறார் என்றும்/உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும்,

சான்றுப்படுத்துகிறேன்.

(தேவையற்ற சொற்களை கீறிவிடவும்.)

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

3-844

---

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை – 2010**

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் தகவுத்திறன் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2011, யூலை மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்துவதற்கான இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | - 01 |
| கண்டி | - 02 |
| காலி | - 03 |
| மாத்தறை | - 04 |
| யாழ்ப்பாணம் | - 05 |
| மன்னார் | - 06 |
| முல்லைத்தீவு | - 07 |
| திருகோணமலை | - 08 |
| மட்டக்களப்பு | - 09 |
| குருணாகல் | - 10 |
| அனுராதபுரம் | - 11 |
| பதுளை | - 12 |
| இரத்தினபுரி | - 13 |
| கிளிநொச்சி | - 14 |

மேற்படி ஏதேனுமொரு நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அந்நிலையம் இரத்துச் செய்யப்படுவதுடன் அப் பரீட்சார்த்திகள் அடுத்துள்ள நிலையத்துக்கு மாற்றப்படுவர். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாக கருத்தில்கொள்ளுதல் ஆகாது.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானி பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்கு விதிகளை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவர்.

4. **தகைமைகள்**.- சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களும் 2011, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களும் 04 வருட முனைப்பான அத்துடன் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளவர்களுமான அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

**குறிப்பு**.- தரமுயர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி மற்றும் 05 வருட முனைப்பான அத்துடன் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்த திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னராக அமையும் திகதி, பரீட்சையில் சித்தியடைகின்ற பரீட்சார்த்தியொருவர் சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்துவதற்கு தகைமையடைந்த திகதியாக கருதப்படும்.

5. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சைக்காக உள்ள பாடமும் அந்தந்த பாடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. சகல விடைத்தாள்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் எழுத்துப்பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். வாசிக்க முடியாதவாறு எழுத்துக்களை எழுதியிருக்கும் பரீட்சார்த்திகள் தகைமையற்றவர்களாக்கப்படுவர்.

| பாடம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|
| தாபன நடைமுறை | 2 மணித்தியாலங்கள் | 100 |
| நிதி முறைகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| பொது வினாத்தாள் | 1 மணித்தியாலம் | 100 |

**தாபன நடைமுறை**.- அலுவலக முறைகள் தொடர்பான கோட்பாடுகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்துத் தொடர்புகள், கோப்பிடும் முறை மற்றும் படிவங்களைத் தயாரித்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கும் வண்ணம் அரச அலுவலகங்களில் நடைமுறைப்படும் அலுவலக முறைமைகள் தொடர்பான அறிவு மற்றும் அலுவலக நடவடிக்கைகளின்போது பெற்றுள்ள அனுபவங்களின் தேர்ச்சி என்பவற்றை பரீட்சித்தல் இவ்வினாத்தாளின் நோக்கமாகும். தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பான அறிவை பரிசோதிக்கும் ஒரு பகுதியும் இவ் வினாத்தாள் கொண்டிருக்கும். இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - பல்விருப்பு வினா 25 - 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் - 1 1/2 மணித்தியாலங்கள் - (75 புள்ளிகள்)

**நிதி முறைகள்**.- இவ்வினாத்தாள் பின்வருமாறு அமைந்திருக்கும்:-

(அ) பகுதி I - கூட்டல் மற்றும் கழித்தல் பயிற்சிகள் - 15 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

(ஆ) பகுதி II - அரசாங்க திணைக்களங்கள், அமைச்சு அலுவலகங்கள் என்பவற்றில் பிரயோகிக்கப்படும் நிதிக்கட்டுப்பாடு, நிதிகளின் பொறுப்பு, வருமானங்கள் மற்றும் கொடுப்பனவுகள், வரவு செலவு மதிப்பீடு, வழங்கல், வேலைகளும் சேவைகளும் ஆகிய விடயங்களில் பரீட்சார்த்திக்குள்ள அறிவு மற்றும் புரிந்து கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்கிய பகுதிக்கட்டமைப்பு முறையிலான 05 வினாக்களை கொண்டமைந்திருக்கும். - (50 புள்ளிகள்)

(இ) பகுதி III - பொருட்களின் மீளாய்வும் களஞ்சியப்படுத்தலும் தொடர்பான அடிப்படை விடயங்கள் அடங்கிய பகுதிக் கட்டமைப்பு முறையிலான 03 வினாக்களை கொண்டமைந் திருக்கும் - (25 புள்ளிகள்)

**குறிப்பு**.- கூட்டல் பயிற்சிகளுக்கு விடையளிக்கும்போது கணிப் பொறிகள் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

***பொதுவினாத்தாள்.***- ஏதேனும் ஒரு கூற்றினை அல்லது உரையாடலின் குறிப்பினை வாசித்து புரிந்து கொண்டு கடிதமொன்று மற்றும்/அல்லது அறிக்கையொன்று தயாரித்தல் அத்துடன் சமகால சமுதாயத்தின் நிகழ்வுகளைப் புரிந்து கொண்டு ஆராய்வதில் பரீட்சார்த்திக்குள்ள திறமையை மதிப்பிடல் இவ்வினாத்தாளில் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - வழங்கப்பட்ட பந்தி ஒன்றில் அல்லது பிரச்சினை ஒன்றில் கேட்கப்படும் இரண்டு வினாக்களுக்கு (02) விடையளித்தல் வேண்டும் (45 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான மூன்று (03) வினாக்கள் வழங்கப்படுவதுடன் அதில் இரண்டிற்கு விடையளித்தல் வேண்டும். (சிறு குறிப்பு எழுதும் வினா கட்டாயமாகும்)

| | |
|---|---|
| கட்டாய வினா (சிறு குறிப்பு) | - 30 புள்ளிகள் |
| ஏனைய வினாக்கள் | - 25 புள்ளிகள் |
| மொத்தம் | - 55 புள்ளிகள் |

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்தி தாம் சேவைக்கு சேர்ந்த மொழி மூலத்திலோ வேறு அரச கரும மொழியொன்றின் மூலமோ இவ்வினாத்தாள்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(ii) இப்பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது நூற்றுக்கு 33 சதவீத (33%) புள்ளிகளையும் மூன்று பாடங்களுக்கு உரிய மொத்தப் புள்ளிகளின் சராசரியில் நூற்றுக்கு 40 (40%) புள்ளிகளையும் ஒரே பரீட்சையில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. விண்ணப்பப்படிவம் இவ்அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2011, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்போது திருப்திகரமான சேவை தொடர்பான சான்றிதழ் அதற்குள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். சகல விண்ணப்பங்களும் எல்லாவகையிலும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதிலும் சேவைச் சான்றிதழ் தன்னால் கையொப்பமிடப்பட்டுள்ளது என்பதிலும் திணைக்களத் தலைவர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.– பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

9. **விண்ணப்பப்படிவங்கள்**.- விண்ணப்பப்படிவங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் இலக்கம் 1.0 தொடக்கம் 4.0 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை ஏனைய பக்கங்களிலும் அமைதல் வேண்டும் விண்ணப்பத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக் கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்ய வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது இன்றியமையாததாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதாகவுள்ளதா என்பதைப் பற்றி பரீட்சார்த்தியே பொறுப்புக் கூறுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவுவைத்து இத்தீவில் எந்தவொரு மாவட்டத்தில் அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் படப்பிரதியொன்றை வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில்

குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி, பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு, ஏற்புடையதாயின் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி, கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்பவேண்டிய பெக்ஸ் இலக்கத்தை குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தின் பிரதி ஆகியவற்றை தங்களிடம் வைத்துக்கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப் பயனுள்ளதாகும்.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

11. அரச கரும மொழிக்கொள்கையின் குறிக்கோள்களுக்காக சகல விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அவற்றினை அம்மொழியிலேயே பூரணப்படுத்தல் வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலுக்கு ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பான இறுதித் தீர்மானம் இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தைச் சார்ந்ததாக இருக்கும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2011, மாச்சு மாதம் 10 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2010**

Examination for Promotion of Officers in Class III of Public Management Assistants' Service into Class II of the Service – 2010

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும். பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 பிரகாரம் நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தையும் நகர இலக்கத்தையும் குறிப்பிடவும். இதைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர், (முதலெழுத்துக்கள் இறுதியில்) :----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) உதா.: SUNIL, A.B.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

1.4 நீங்கள் அரசாங்க சேவையில் சேர்ந்த பின்னர் உங்களது பெயரையும் மாற்றியுள்ளீரா? அவ்வாறாயின் முன்னர் இருந்த பெயரைக் குறிப்பிடவும் :-----.

2.0 சேவை நிலையமும் முகவரியும் :-----.
2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) : -----.
(இம் முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

3.0 3.1 பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

4.0 தேசிய அடையாள அட்டை இல.:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5.0 தற்போது வகிக்கும் பதவி :-
5.1 பதவி :-----.

5.2 நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

5.3 அச்சேவையில் வகுப்பு III இன் அலுவலராக நியமனத்தை உறுதிப்படுத்திய திகதி :----.

6.0 6.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா? :----.

6.2 பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றவில்லையெனில் செலுத்திய பரீட்சைக் கட்டணத்தின் பெறுமதி :----.

| நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றவில்லையெனில் பரீட்சைக் கட்டணமாக ரூபா 400 ஐச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். |
|---|

7.0 **விண்ணப்பதாரியின் கூற்று :**

(i) மேற்படி என்னால் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானவை எனவும் ;

(ii) அரச முகாமை உதவியாளர் சேவையின் அலுவலர் எனவும் ............ ஆந் திகதி எனது நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் ;

(iii) 2011, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியில் உடன் முன்னரான 04 வருட காலத்திற்குள் எல்லா வேதன ஏற்றங்களையும்/பெற்றுக்கொள்ள முடியுமான எல்லா சம்பள ஏற்றங்களையும் என்னால் உழைத்துப் பெறப்பட்டது எனவும் ;

(iv) இறுதியான சம்பள ஏற்றத் திகதியிலிருந்து தண்டனை அல்லது எச்சரிக்கைக்கு மேற்பட்ட பாரிய தண்டனை எதுக்கும் நான் ஆளாகவில்லை என்றும் ;

(v) நான் பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றுகிறேன் எனவும்/பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது எனவும்

கௌரவத்துடன் உறுதிமொழிகிறேன்.

இதில் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ அல்லது பிழையானதெனவோ அறியவருமிடத்து எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அறிவேன். இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளை கடைப்பிடிப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

மேற்படி விபரங்கள் சரியானவை எனவும், மேற்காட்டப் பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். நான் முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றேன் எனவும், ரூபா 90 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதெனவும் சான்றுப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் இணங்குகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(கீழ் குறிப்பிடப்படும் குறிப்பை பார்க்கவும்)

திகதி :----.

**குறிப்பு**.- திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்கு பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ................................. எனது அலுவலகத்தின் அலுவலர் எனவும், நான் தனிப்பட்ட முறையில் அவரை அறிவேன் எனவும் .......... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) திரு./திருமதி/செல்வி ...................... 2011, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியன்று அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இல் நான்கு (04) வருட சேவையை பூர்த்தி செய்துள்ள அலுவலரெனவும் .......... ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப் பட்ட அறிவித்தலின் பிரகாரம் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையுள்ளவரெனவும்,

(ii) அவரின் பெயர் வழிக்கோப்பின் வகுப்பு III இன் நியமனக் கடிதத்தின் இலக்கம் ............ (நியமனக் கடிதத்தின் இலக்கம் எழுதவும்) எனவும்,

(iii) அவரின் இவ்விண்ணப்பப்படிவத்தில் 1.0 முதல் 7.0 வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையா என பரிசீலனை செய்யப்பட்டதெனவும், அவை சரியானவை எனவும்,

(iv) அவர் இப்பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றுகின்றார் எனவும்/தொடர்புடைய பரீட்சைக்காக குறித்துரைக்கப்பட்ட முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளன எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

(தேவையற்றவையை கீறி விடவும்.)

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

3-845

---

## தேசிய கல்வி நிறுவகத்தினூடாக பிராந்திய நிலையங்களில் வார இறுதி நாட்களில் நடத்தப்படும் ஆசிரியர் கல்வி பாடநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவுசெய்தல் - 2011/2012

வார இறுதி ஆசிரியர் கல்வி பாடநெறியைத் (2011-2012) தொடர்வதற்காகக் கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அல்லது மாகாண கல்வி செயலாளர் கையொப்பமிட்ட முறையான நியமனக் கடிதத்தோடு தற்போது அரசாங்க பாடசாலைகளில் பணிபுரியும் பயிற்றப்படாத ஆசிரியர்கள் அல்லது ஆசிரிய உதவியாளர்கள்.

1.2 கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைக்கான பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தனியார் பாடசாலைகளின் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்ட பாடசாலைகளில் மாகாண கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் நியமனக் கடிதம் பெற்று பணியாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள்.

1.3 கல்வி அமைச்சின் பிரிவெனா கல்விப் பகுதியில் பதிவுசெய்துள்ள பிரிவெனாக்களில் மாகாண கல்வி பணிப்பாளர் அங்கீகாரத்துடனான நியமனக் கடிதங்கொண்ட பயிற்றப்படாத பிரிவெனா ஆசிரியர்கள்.

1.4 2009 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல்படி வார இறுதி பயிற்சிக்கு விண்ணப்பித்து இதுவரை பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படாத அரச, தனியார் மற்றும் பிரிவெனா பாடசாலை ஆசிரியர்களும் மீள விண்ணப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- 2010 ஆம் ஆண்டு வாரயிறுதி பயிற்சியின் முதலாவது கட்டத்தைப் பூர்த்திசெய்து பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரியர்களும் ஆசிரிய உதவியாளர்களும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

2. 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் அனைத்து ஆசிரியர்களையும் பயிற்றுவித்து முடிப்பதுடன் இனிவருங்காலங்களில் உரிய பயிற்சியின்றி பாடசாலைகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்களை அனுமதிப்பதில்லையெனவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. எனவே பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பயிற்சியைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க வேண்டும்.

3. தற்போது ஆசிரியர் கல்லூரிகளில் முழுநேர ஆசிரியர் கல்விநெறியைப் பின்பற்றுபவர்கள் மேற்கூறிய ஆசிரியர் கல்விப் பாடநெறிக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பாடம் தொடர்பான பாடநெறிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். நியமனக் கடிதத்தில் பாடம் குறிப்பிடாத பட்சத்தில் தற்போது பாடசாலையில் கற்பிக்கும் பிரதான பாடம் சார்ந்த பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும். (நேர்முக பரீட்சையின்போது நிரூபிக்கக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.)

5. மேற்கூறப்பட்ட ஆசிரிய கல்வி பாடநெறி தேசிய கல்வி நிறுவகத்தினால் ஸ்தாபிக்கப்படும் பிராந்திய நிலையங்களில் வாரயிறுதியிலும் விடுமுறை நாட்களிலும் நடாத்தப்படும்.

6. ஆசிரியர் கல்வி பாடநெறியை பூர்த்திசெய்வதற்குத் தேவையான ஒப்படை, செயற்றிட்டம், பாட இணைச் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்திபெறுதல் என்பவைகளின் அடிப்படையில் ஆசிரிய பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும்.

6.1 உங்களின் நியமனத்தின் பின்னணியில் யாதும் குறைபாடுகள் இடம்பெற்றுள்ளமை வெளிப்படும்போது இச்சான்றிதழ் சேவையை உறுதிசெய்தல் அல்லது பதவி உயர்வு தேவைகளுக்காக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7. பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளுதலும் பிராந்திய நிலையங்களை நிறுவுதலும் தொடர்பான இறுதி முடிவு கல்வி அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்படும்.

8. **விண்ணப்பப்படிவத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்** :

8.1 இவ்வர்த்தமானி அறிவித்தலைக் கவனமாக வாசித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும்.-

(அ) ஆசிரியர் கல்வி பாடநெறியைத் தொடரும் மொழிமூலத்திலேயே விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்பத்திரத்தோடு நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட நகல் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவம் 8" x 12" (A4) அளவிலான கடதாசியின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்பத்திரம் கீழ்க்காணும் மாதிரியான கடிதவுறையைப் பயன்படுத்தி "பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகம், கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவஞ்சலில் 2011.04.08 ஆந் திகதிக் முன்னர் அனுப்ப வேண்டும்.

(உ) நீங்கள் அனுப்பவேண்டிய கடிதவுறையின் மாதிரி கீழே தரப்பட்டுள்ளது :-

**பதிவஞ்சல்**

வார இறுதி ஆசிரியர் கல்வி பாடநெறி :----.
மொழிமூலம் :----.
பாடநெறி :----.
பாடசாலையின் வலயம் :----.

பணிப்பாளர் (ஆசிரியர் கல்வி நிர்வாகம்),
கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பத்தரமுல்ல.

எச். எம். குணசேகர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2011, மாச்சு .............

8.2 கீழ்க்காணும் பாடநெறிகளில் உமது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பாடத்துக்கு அமைய விண்ணப்பிக்க வேண்டும் :-

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் |
|---|---|
| 01 | சிங்களம் (Sinhala) |
| 02 | தமிழ் (Tamil) |
| 03 | ஆரம்பக் கல்வி (Primary Education) |
| 04 | சமூக விஞ்ஞானம் (Social Science) |
| 05 | விஞ்ஞானம் (Science) |
| 06 | கணிதம் (Mathematics) |
| 07 | விவசாயம் (Agriculture) |
| 08 | மனையியல் (Home Science) |
| 09 | ஆங்கிலம் (English) |
| 10 | பௌத்தம் (Buddhism) |
| 11 | கிறிஸ்தவம்/றோமன் கத்தோலிக்கம் (Christianity/Roman Catholicism) |
| 12 | இந்து சமயம் (Hinduism) |
| 13 | இஸ்லாம் (Islam) |
| 14 | சித்திரம் (Art) |
| 15 | சங்கீதம் (Music) |
| 16 | நடனம் (Dance) |
| 17 | அரபு (Arabic) |
| 18 | விசேட கல்வி (Special Education) |
| 19 | கைப்பணியும் தொழிநுட்பமும் (Handicrafts and Technology) |
| 20 | வர்த்தகம் (Commerce) |
| 21 | உடற்கல்வி (Physical Education) |
| 22 | இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்/தமிழ்) (Second National Language (Sinhala/Tamil)) |

8.3 மொழிமூலம் தொடர்பான பயன்பாட்டுக்கு கீழ்க்காணும் குறியீட்டைப் பயன்படுத்துக :-

| சிங்களம் - S | தமிழ் - T | ஆங்கிலம் - E |
|---|---|---|
| (Sinhala) | (Tamil) | (English) |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் ஆசிரியர் கல்விப் பாடநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவுசெய்தல் - 2011/2012**

1. பாடநெறியைத் தொடரவிருக்கும் மொழிமூலம், பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர் ஆகியவற்றை அறிவுறுத்தலுக்கு அமைய கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடுக.

1.1 விண்ணப்பிக்கும் பாடநெறியைத் தொடரவிருக்கும் மொழி மூலத்துக்குப் பொருத்தமான இலக்கத்தைச் சுற்றி வட்டமிட்டு குறிப்பிடுக.

| மொழிமூலம் | | | விண்ணப்பிக்கும் பாடநெறி | |
|---|---|---|---|---|
| S | T | E | பாடநெறி இலக்கம் | பாடநெறியின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) |
| 1 | 2 | 3 | | |

| முதற் தெரிவு | | இரண்டாம் தெரிவு | | மூன்றாம் தெரிவு | |
|---|---|---|---|---|---|
| நிலையம் | | நிலையம் | | நிலையம் | |
| இலக்கம் | பெயர் | இலக்கம் | பெயர் | இலக்கம் | பெயர் |
| | | | | | |

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில் எழுதுக. பின்னால் எழுதப்படும் பெயரைக் குறிப்பிட்டு அதன்பின் முதலெழுத்துக்களைக் குறிக்குக. உதாரணம் : PERERA, A. B.) :—————.

3. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :—————.

4. பால் (ஆண்/பெண் தன்மை) (பொருத்தமான இலக்கத்தை எதிரிலுள்ள சதுரத்தில் எழுதுக.) :

ஆண் - 1 பெண் - 2 ☐

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :—————.

6. தொலைபேசி இல. :—————. செல்லிட தொலைபேசி இல. :—————.

7. மின்னஞ்சல் (இருப்பின்) :—————.

8. பிரத்தியேக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :—————.

9. தற்போதைய சேவை நிலையம் (ஆங்கில பெரிய எழுத்தில்) :—————.

10. தற்போதைய சேவை நிலைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :—————.

11. சேவை நிலையத்துக்குரிய மாவட்டம் :

11. 1 நிரந்தர வதிவிடத்துக்குரிய மாவட்டம் :—————.

11. 2 மேற்கூறப்பட்டவைகளில் எம்மாவட்டத்தில் பயிற்சிக்கான நிலையம் அமைவது உமக்கு வசதியாகும் :—————.

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும் பிழையற்றதெனவும் உறுதிமொழிகின்றேன். என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையெனக் காணப்படுமிடத்து பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்பட மாட்டேன் எனவும், தெரிவுசெய்யப்பட்ட பின், வழங்கப்பட்ட தகவல்கள் பிழையென வெளிப்படும் பட்சத்தில் பாடநெறியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

(ii) தற்போது எந்தவொரு நிறுவனசார் ஆசிரியர் பயிற்சியிலும் நான் பங்குபற்றுவதில்லை என வெளிப்படுத்துகின்றேன்.

.............................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **அதிபரின் குறிப்புரை :**

விண்ணப்பதாரி எனது பாடசாலையில் ................................ ஆந் திகதி முதல் ஆசிரியராகச் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பதாரியால் மேலே வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் சரியானவை எனவும் உறுதிகூறுகின்றேன்.

...........................,
அதிபரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :----.

8-635

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.